முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2018 சனவரி

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2018-01-20
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசித்து விளங்கிக்கொள்ள : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப்பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இந்தப் பகுதியிலுள்ள ஏழு (07) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*வினா இலக்கங்கள்* ***1.1*** *முதல்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றுக்கு எதிரே நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** **வரையறுக்கப்பட்ட அனுராதா (தனி.) கம்பனி** 2016 ஏப்ரல் 01 இல் எந்திரமொன்றினை ரூ.1,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்தது. எந்திரத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளும் எதிர்பார்க்கப்படும் ஈற்றுப்பெறுமதி ரூ.100,000/- உம் ஆகும்.:

2017 மார்ச் 31 இல் எந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி:

(1) ரூ.720,000/-. (2) ரூ.800,000/-. (3) ரூ.820,000/-. (4) ரூ.700,000/-.

(02 புள்ளிகள்)

**1.2** கீழே தரப்பட்டுள்ள விபரங்கள் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட பெரேரா கம்பனியின்** வியாபார வருமதிகள் பற்றியதாகும். எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன:

| | ரூ. |
|---|---|
| 2016 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகள் | 130,000 |
| வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற பணம் | 686,400 |
| அனுமதிக்கப்பட்ட கழிவு | 1,400 |
| 2017 மார்ச் 31 இல் வியாபார வருமதிகள் | 181,000 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில், 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த விற்பனை:

(1) ரூ.734,440/-. (2) ரூ.736,000/-. (3) ரூ.738,800/-. (4) ரூ.740,360/-.

(02 புள்ளிகள்)

**1.3** **ருசித்ரா** தமது சில்லறை வியாபாரத்திற்கு முறையான கணக்குப் பதிவுகளைப் பேணவில்லை. அவர் சகல விற்பனைகளையும் காசு அடிப்படையிலேயே மேற்கொள்கிறார். 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| | ரூ. |
|---|---|
| 2016 ஏப்ரல் 01 இல் தொக்கு | 670,000 |
| ஆண்டின்போது கொள்வனவு | 1,840,000 |
| 2017 மார்ச் 31 இல் தொக்கு | 540,000 |

இந்த வியாபாரம் விற்பனையில் 20% மொத்த இலாபம் பெறுகின்றதாகில் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்:

(1) ரூ.1,970,000/-. (2) ரூ.492,500/-. (3) ரூ.394,000/-. (4) ரூ.2,364,000/-.

(02 புள்ளிகள்)

**1.4** இலாப நோக்கற்ற அமைப்புகள் தொடர்பில் சரியான கூற்றினைக் கீழ்வரும் கூற்றுக்களிலிருந்து தெரிவுசெய்க:

(1) நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்திசைதல் வேண்டும்.

(2) பிரதான வருமான மூலமானது பொருட்கள், சேவைகளை விற்பதனால் கிடைக்கும் இலாபமாக இருப்பதில்லை.

(3) அங்கத்தவர் சந்தாப்பணம் அட்டுறு அடிப்படையில் கணக்கிற் கொள்ளப்படும்.

(4) மேற்கூறிய எல்லாம். (02 புள்ளிகள்)

**1.5** **வரையறுக்கப்பட்ட பெரேரா (தனி.) கம்பனி** பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்ட கம்பனி ஆகும். 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் கம்பனி ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டுள்ளன:

| | ரூ. |
|---|---|
| விற்பனை (VAT நீங்கலாக ) | 4,939,940 |
| வரி விலைப்பட்டியலுடன்கூடிய மொத்தக் கொள்வனவு (VAT நீங்கலாக) | 1,777,900 |
| 2017 சனவரி 01 இல் VAT கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு மீதி | 22,500 |

VAT வீதம் - 15%.

2017 மார்ச் 31 ஆந் திகதியில் VAT கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு மீதி என்ன?

(1) ரூ.496,806/-. (2) ரூ.474,306/-. (3) ரூ.289,185/-. (4) ரூ.451,806/-.

(02 புள்ளிகள்)

***1.6*** *தொடக்கம்* ***1.7*** *வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.6** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கு அமைய, கீழ்வரும் ஒவ்வொன்றினதும் ஏற்பாடுகளைக் **குறிப்பிடுக.**

**(a)** பங்காளர்களால் வழங்கப்படும் கடன்கள் மீதான வட்டி

**(b)** பங்குடமையின் முகாமைத்துவம்

**(c)** இலாப, நட்டங்கள் (06 புள்ளிகள்)

**1.7** ஒரு கம்பனி அதன் தொக்குகளை FIFO முறையினைப் பாவித்து மதிப்பிடுகிறது. 2017 டிசெம்பர் 01 ஆந் திகதி கம்பனியானது ஒவ்வொன்றும் ரூ.140/- இல் மதிப்பிடப்பட்ட 600 அலகு தொக்குகளைக் கொண்டிருந்தது. 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த மாதத்தில் கீழ்வரும் ஊடுசெயல்கள் இடம்பெற்றன:

| **திகதி** | **விபரம்** | **அலகுகள்** | **அலகொன்றின் விலை (ரூ.)** |
|---|---|---|---|
| 2017 டிசெம்பர் 20 | கொள்வனவு | 400 | 220 |
| 2017 டிசெம்பர் 25 | விற்பனை | 750 | 310 |
| 2017 டிசெம்பர் 30 | கொள்வனவு | 300 | 245 |

2017 டிசெம்பர் 31 இல் தொக்கின் மதிப்பினைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதியிலுள்ள ஐந்து (05) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**வரையறுக்கப்பட்ட ரெக்ஸ் கார்மென்ட்ஸ் (தனியார்) கம்பனியின்** 2017 டிசெம்பர் மாதத்திற்கான காசேட்டின் வங்கி நிரலும் வங்கிக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன:

**ரெக்ஸ் கார்மென்ட்ஸ் (தனி.) கம்பனி**
**2017 டிசெம்பர் மாதத்திற்கான காசேடு (வங்கி நிரல்)**

| **திகதி** | **விபரம்** | | **வரவு (ரூ.)** | **செலவு (ரூ.)** | **மீதி (ரூ.)** |
|---|---|---|---|---|---|
| 2017.12.01 | கணக்குத் திறப்பதற்கு ஆரம்ப வைப்பு | | 1,000,000 | - | 1,000,000 |
| 2017.12.02 | காசு வைப்பு | | 480,760 | | 1,480,760 |
| 2017.12.09 | கடன்கொடுத்தோர் கொடுப்பனவு | 637101 | | 132,580 | 1,348,180 |
| 2017.12.15 | வாடகைக் கொடுப்பனவு | 637102 | | 125,540 | 1,222,640 |
| 2017.12.15 | காசு வைப்பு | | 12,580 | | 1,235,220 |
| 2017.12.18 | கடன்பட்டோர் வைப்பு | | 766,600 | | 2,001,820 |
| 2017.12.18 | காசோலை வைப்பு | | 154,540 | | 2,156,360 |
| 2017.12.21 | மின்கட்டணக் கொடுப்பனவு | 637103 | | 12,000 | 2,144,360 |
| 2017.12.21 | கடன்கொடுத்தோர் கொடுப்பனவு | 637104 | | 52,480 | 2,091,880 |
| 2017.12.25 | சம்பள நேரடி மாற்றல் | | | 1,955,640 | 136,240 |
| 2017.12.31 | மீதி | | - | - | 136,240 |

**ரெக்ஸ் கார்மென்ட்ஸ் (தனி.) கம்பனி**
**2017 டிசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கூற்று**

| திகதி | விபரம் | தொடர்பு | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 2017.12.01 | மீதி மு.கொ.வ. | | - | - | - |
| 2017.12.01 | காசு வைப்பு – கணக்குத் திறக்க | | | 1,000,000 | 1,000,000 |
| 2017.12.01 | காசோலைப் புத்தகக் கட்டணம் | | 500 | | 999,500 |
| 2017.12.02 | காசு வைப்பு | | | 480,760 | 1,480,260 |
| 2017.12.15 | காசு வைப்பு | | | 12,580 | 1,492,840 |
| 2017.12.18 | நேரடி வைப்பு | தொடர்பு: 12542165 | | 766,600 | 2,259,440 |
| 2017.12.18 | காசோலை வைப்பு | | | 154,540 | 2,413,980 |
| 2017.12.22 | காசோலைக் கொடுப்பனவு | 637103 | 12,000 | | 2,401,980 |
| 2017.12.22 | வங்கிக் கட்டணம் | | 13,670 | | 2,388,310 |
| 2017.12.25 | மாற்றல் | தொடர்பு: 23154851 | 1,955,640 | | 432,670 |
| 2017.12.30 | நிலையியற் கட்டளை | கடன் இல.: 62587413 | 69,000 | | 363,670 |
| 2017.12.30 | காசோலைக் கொடுப்பனவு | 637101 | 132,580 | | 231,090 |
| 2017.12.31 | மீதி | | | | 231,090 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**(a)** 2017 டிசெம்பர் 31 இல் செம்மையாக்கப்பட்ட காசேட்டினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

**(b)** 2017 டிசெம்பர் 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் **தயாரிக்குக.** (02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வ/ப பே வெல் (தனி.) கம்பனியின்** டிசெம்பர் மாதத்திற்கான சம்பள விபரங்கள் கீழ்வருமாறு:

| அடிப்படைச் சம்பளம் (ரூ.) | படிகள் (ரூ.) | மொத்தச் சம்பளம் (ரூ.) | கடன் தவணைக் கட்டணம் (ரூ.) | EPF கழிப்பனவு (ரூ.) | நிகரச் சம்பளம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 8,700,000 | 5,400,000 | 14,100,000 | (2,300,000) | (696,000) | 11,104,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிப் (ETF) பங்களிப்புகள், அடிப்படைச் சம்பளத்தில் கணிக்கப்படும்.

(2) EPF க்கான ஊழியர் பங்களிப்பு மற்றும் கம்பனியின் பங்களிப்பு முறையே 8% மற்றும் 12% ஆகும்.

(3) ETF க்கான கம்பனியின் பங்களிப்பு 3% ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேற்படி ஊடுசெயல்களைப் பதிவுசெய்வதற்குத் தேவையான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை (காசு ஊடுசெயல் உட்பட) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

தனியுரிமையாளர் வியாபாரமான **அமல் டிரேடர்ஸ்** கணக்கேடுகளிலிருந்து 2017 டிசெம்பர் மாதத்திற்குக் கீழ்வரும் விபரங்கள் பிரித்தறியப்பட்டன:

| | **ரூ.** |
|---|---|
| 2017 டிசெம்பர் 01 ஆந் திகதியில் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 2,350,000 |
| 2017 டிசெம்பர் 01 ஆந் திகதி கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 1,780,000 |
| மாதத்தின்போது இடம்பெற்ற ஊடுசெயல்கள்: | |
| கடன் கொள்வனவு | 6,100,000 |
| கடன் விற்பனை | 4,800,000 |
| கடன் கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவு | 250,000 |
| கடன்கொடுத்தோருக்குக் கொடுப்பனவு | 4,050,000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற தொகை | 3,950,000 |
| பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் | 70,000 |

***நீங்கள் செய்யவேண்டியவை:***

2017 டிசெம்பர் மாதத்திற்குக் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 05

**ரண்மல் பங்குடமையின்** பங்காளர்களான **A, B** மற்றும் **C** இலாப, நட்டங்களை முறையே 4 : 3 : 3 எனும் விகிதத்தில் பகிருகின்றனர். 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி **B** பங்குடமையிலிருந்து ஓய்வுபெறவும், **A** யும் **C** யும் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிரும் வகையில் பங்குடமையைத் தொடர்ந்து நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

2017 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்குடமையின் நன்மதிப்பு ரூ.930,000/- ஆக மதிப்பிடப்பட்டதுடன் நன்மதிப்பினை கணக்கேடுகளில் பேணுவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், 2017 ஏப்ரல் 01 இல் மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பிடப்பட்டதுடன் அதன் விபரங்கள் கீழ்வருமாறு:

| | **கிரயம்** | **2017 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம்** | **2017 ஏப்ரல் 01 இல் மீள்மதிப்பு** |
|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 1,800,000 | 900,000 | 1,200,000 |

கணக்கேடுகளில் மோட்டார் வாகனங்கள், மீள்மதிப்புத் தொகைகளில் முன்கொணரப்படும்.

***நீங்கள் செய்யவேண்டியது:***

மேலே கூறப்பட்ட நன்மதிப்பினையும் மீள்மதிப்பீட்டினையும் பதிவுசெய்வதற்குத் தேவையான நாட்குறிப் பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

***சிறீஹரன் என்ரபிரைஸின்*** மோட்டார் வாகனங்கள் பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:

(1) 2014 யூலை 01 ஆந் திகதி ரூ.3,200,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட விநியோக வான் 2016 யூலை 01 ஆந் திகதி ரூ.2,000,000/- க்கு விற்கப்பட்டது.

(2) 2016 அக்டோபர் 01 ஆந் திகதி புதிய விநியோக டிரக் வண்டி ரூ.4,500,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்டது.

(3) வியாபாரக் கொள்கையானது மோட்டார் வாகனங்களை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் 25% தேய்மானம் செய்வதாகும்.

(4) வியாபாரத்தில் வேறு மோட்டார் வாகனங்கள் இல்லையெனக் கொள்க.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கு கீழ்வருவனவற்றைக் **கணிக்குக**:

(a) மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் (நட்டம்) (03 புள்ளிகள்)

(b) ஆண்டிற்கான மோட்டார் வாகனத் தேய்மான அறவீடு (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**ஹப்பி விளையாட்டுக் கழகம்** அதன் அங்கத்தவர்களுக்கு விளையாட்டு வசதிகளை வழங்குவதுடன், போசனசாலை ஒன்றினை நடாத்துகின்றது. அத்துடன் வெளி நிகழ்வுகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாடகைக்கு விடுகின்றது:

2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ஹப்பி விளையாட்டுக் கழகத்தின்** கொள்ளல், கொடுத்தல் கணக்கு கீழ்வருமாறு:

**கொள்ளல், கொடுத்தல் கணக்கு** *(ரூ.'000)*

| | | | |
|---|---|---|---|
| 2017.01.01. இல் மீதி | 6,000 | போசனசாலை வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | 7,200 |
| அன்பளிப்புகள் | 7,500 | ஏனைய போசனசாலைச் செலவுகள் | 1,200 |
| விளையாட்டு உபகரண வாடகை வருமானம் | 8,200 | செயலகச் செலவுகள் | 600 |
| அங்கத்தவர் சந்தா | 26,300 | காகிதாதிகள், அச்சிடல், விளம்பரச் செலவுகள் | 1,500 |
| போசனசாலை விற்பனை | 14,700 | விளையாட்டு உபகரணம் (2017.12.31 இல் கொள்வனவு) | 18,000 |
| | | பல்லினச் செலவுகள் | 5,100 |
| | | 2017.12.31 இல் மீதி | 29,100 |
| | **62,700** | | **62,700** |

*சொத்துக்களும் பரிப்புகளும் கீழ்வருமாறு:* *(ரூ.'000)*

| | 2017 சனவரி 01 | 2017 டிசெம்பர் 31 |
|---|---|---|
| போசனசாலையின் வியாபார சென்மதிகள் (வழங்குநர்கள்) | 1,200 | 1,400 |
| அடுத்த ஆண்டிற்கான அங்கத்தவர் சந்தா முற்பெறுவனவு | 400 | 200 |
| நிலுவையிலுள்ள அங்கத்தவர் சந்தா | 600 | 300 |
| விளையாட்டு உபகரணம் | 54,000 | 57,000 |
| போசனசாலைத் தொக்குகள் - கிரயத்தில் | 3,200 | 2,600 |
| அட்டுறு செலவுகள் (காகிதாதிகள், அச்சிடல் மற்றும் விளம்பரம்) | 500 | 800 |

அன்பளிப்புகள் பெறப்படும் காலத்திலேயே வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும். 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் தவிர, ஆண்டின்போது ஆதனம், பொறி, உபகரணம் தொடர்பில் விற்பனைகளோ அல்லது வேறு கொள்வனவுகளோ இடம்பெறவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான போசனசாலை வியாபாரக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) **ஹப்பி விளையாட்டுக் கழகத்தின்** 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கு (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தனியுரிமையாளர் வியாபாரமான **காமி கலக்சன்ஸ்** தொடர்பாகத் தரப்பட்டுள்ளன:

(1) வியாபாரத்தின் சொத்துக்களும் பரிப்புகளும்:

| | **2016 ஏப்ரல் 01(ரூ.)** | **2017 மார்ச் 31(ரூ.)** |
|---|---|---|
| அலுவலக உபகரணம் (முன்கொணரற் பெறுமதியில்) | 550,000 | 495,000 |
| தொக்குகள் | 192,000 | 180,000 |
| காசுக் கையிருப்பு | 230,000 | ? |
| வங்கி மீதி | 300,000 | ? |
| வியாபார சென்மதிகள் | 160,000 | 282,000 |
| அட்டுறு மின்கட்டணம் | - | 3,000 |

(2) சகல விற்பனைகளும் கிரயத்தில் 50% மொத்த இலாபம் பெறும் வகையில் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(3) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது காசு விற்பனையிலிருந்து ரூ.456,000/- வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது.

(4) ஆண்டின்போது கீழ்வரும் கொடுப்பனவுகள் காசோலை மூலம் மேற்கொள்ளப்பட்டன:

| | **ரூ.** |
|---|---|
| வியாபார சென்மதிகள் | 190,000 |
| மின் கட்டணம் | 13,000 |
| ஏனைய செலவுகள் | 55,000 |

(5) அத்துடன் கீழ்வரும் கொடுப்பனவுகள் காசு மூலம் மேற்கொள்ளப்பட்டன:

| | **ரூ.** |
|---|---|
| வியாபார சென்மதிகள் | 168,000 |
| கூலிகள் | 90,000 |
| எடுப்பனவுகள் | 10,000 |

(6) எல்லாக் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 மார்ச் 31 இல் **காமி கலக்ஸ்சன்ஸ்** இன் பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 09

**MA பங்குடமையின்** பங்காளர்களான **மனுவும் அனுவும்** இலாப, நட்டங்களை முறையே 3 : 1 எனும் விகிதத்தில் பகிருகின்றனர். 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியில் அவர்கள் கீழ்வரும் கட்டுறுப்புகளின் கீழ் **தனு** என்பவரை புதிய பங்காளராக இணைத்து, பங்குடமையை **MAD பங்காளர்கள்** எனும் பெயரில் நடத்த இணங்கினர்:

(1) ***மனு, அனு*** மற்றும் ***தனு*** ஆகியோருக்கிடையில் இலாப, நட்டம் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் பகிரப்படும்.

(2) மூலதனம் மீது ஆண்டுக்கு 12% வட்டி (ஆரம்ப மூலதன கணக்கு மீதியில்) செலுத்தப்படும்.

(3) ***மனு*** மாதாந்தம் ரூ.30,000/- சம்பளம் பெற உரித்துடையவர்.

2017 மார்ச் 31 ஆந் திகதி பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன:

| | **வரவு (ரூ.)** | **செலவு (ரூ.)** |
|---|---:|---:|
| மூலதனக் கணக்கு – 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி: | | |
| **மனு** | | 8,000,000 |
| **அனு** | | 4,000,000 |
| **தனு** | | 6,000,000 |
| நடைமுறைக் கணக்கு – 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி: | | |
| **மனு** | | 1,000,000 |
| **அனு** | 400,000 | |
| ஆண்டின்போது எடுப்பனவு: | | |
| **மனு** | 300,000 | |
| **அனு** | 200,000 | |
| **தனு** | 100,000 | |

பங்குடமையின் பகிர்வுக்கு முன்னர் 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் ரூ.3,000,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கு **MAD பங்காளர்களின்** பங்குடமைக்கு கீழ்வரும் கணக்குகளைத் **தயாரிக்குக**:

(a) இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கு (04 புள்ளிகள்)

(b) பங்காளர் நடைமுறைக் கணக்கு (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## பகுதி D

இந்தப் பகுதியிலுள்ள ஒரே வினாவுக்கும் விடை தருக.

(25 புள்ளிகள்)

### வினா 10

**வரையறுக்கப்பட்ட லக்கி 13 (தனி.) கம்பனியின்** 2017 மார்ச் 31 ஆந் திகதியில் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது:

*(ரூ.'000)*

| | வரவு | செலவு |
|---|---:|---:|
| குறிப்பிடு மூலதனம் (300,000 சாதாரண பங்குகள்) | | 32,000 |
| கைக்கொள் இலாபம் - 2016 ஏப்ரல் 01 இல் | | 12,000 |
| 12% தனிச்சங்கள் | | 20,000 |
| காணியும் கட்டடமும் - கிரயத்தில் (காணி - ரூ.30 *மில்லியன்*) | 80,000 | |
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 40,000 | |
| திரள் தேய்மானம் - 2016 ஏப்ரல் 01 இல்: | | |
| கட்டடம் | | 5,000 |
| அலுவலக உபகரணம் | | 25,000 |
| தொக்குகள் - கிரயத்தில் 2017 மார்ச் 31 | 60,000 | |
| வியாபார வருமதிகள் | 43,000 | |
| ஐயுறவுக்கடன் ஏற்பாடு - 2016 ஏப்ரல் 01 இல் | | 1,600 |
| வங்கி மீதி | 1,000 | |
| செலுத்திய வருமான வரி | 3,200 | |
| விற்பனை | | 463,600 |
| விற்பனைக் கிரயம் | 265,500 | |
| விநியோகச் செலவுகள் | 51,700 | |
| நிருவாகச் செலவுகள் | 68,000 | |
| செலுத்திய தனிச்ச வட்டி | 1,200 | |
| வியாபார சென்மதிகள் | | 50,900 |
| வருமான வரி ஏற்பாடு – 2016 ஏப்ரல் 01 இல் (வரிமதிப்பாண்டு 2015/16 இற்கானது) | | 3,500 |
| | **613,600** | **613,600** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) 2017 மார்ச் 31ல் தொக்குகளின் நிகர தேறுகைப் பெறுமதி (NRV) ரூ.59,200,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(2) 2017 மார்ச் 31 இல் கம்பனிக்கு ரூ.1,500,000/- தரவேண்டியிருந்த வாடிக்கையாளர் ஒருவர் 2017 மே 20 ஆந் திகதி வங்குரோத்து அடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டார். அதன் காரணமாக முழுத்தொகையும் அறவிடமுடியாததாக உள்ளது. மேலும், நிலுவையிலுள்ள வியாபார வருமதியின் 5% ஐயுறவுக் கடனாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலங்கள்:

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 25 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 10 ஆண்டுகள் |

ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரண சேர்ப்பனவுகளோ அல்லது விற்பனைகளோ இடம்பெறவில்லை.

(4) 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி ஒவ்வொன்றும் ரூ.100/- பெறுமதியான 200,000 எண்ணிக்கையிலான 12% தனிச்சங்களை கம்பனி வழங்கியது. இதன் மீதான வட்டி ஆண்டிற்கு இரு தடவை செலுத்தப்படும். ஆண்டின்போது செலுத்திய வட்டியானது செலுத்தப்பட்ட தனிச்ச வட்டிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5) 2017 மார்ச் 31 இல் கீழ்வரும் அட்டுறு செலவு மற்றும் முற்கொடுப்பனவுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்:

| | ரூ. |
|---|---|
| அட்டுறு விளம்பரச் செலவு | 800,000 |
| முன்செலுத்திய காப்புறுதி | 120,000 |

(6) வரிமதிப்பாண்டு 2015/16 க்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ.3,200,000/- ஆக இணங்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் முற்றாக செலுத்தித் தீர்க்கப்பட்டது. அவ்வாறு செலுத்திய வரி, செலுத்திய வருமான வரிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வரிமதிப்பாண்டு 2016/17 க்கு மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ.3,800,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(7) கம்பனிப் பணிப்பாளர்கள் வழங்குவதற்காக நிதிக் கூற்றுகளை 2017 யூன் 30 ஆந் திகதி அங்கீகரித்தனர்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**லக்கி 13 (தனி.) கம்பனியின்** முகாமைத் தேவைகளுக்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**.:

(a) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்று (*முற்றடக்க வருமானக் கூற்று*) (10 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று (15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |